ॐ

ஓம்
ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்
## (பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
10, மாசி 2026

Date:
22, Febuary 2026

வகுப்பு 25

www.vedaneri.org

அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் : 19

# புறங்கூறாமை

## (ஒருவரை இகழ்ந்து பிறரிடம் பேசாமை)

பிறர் இல்லாதபொழுது அவரது குற்றங்களைப் பேசுதல் இல்லாமை.

மனதிலுள்ள குற்றங்களே சொல்லாகவும் செயலாகவும் வெளிப்படுவதால் மனக்குற்றங்களான அழுக்காறாமை, வெஃகாமைகளின் பின் புறங்கூறாமை வைக்கப்பட்டது.



குறள்: 1 புறங்கூறாமையின் நன்மை

1. புறங்கூறாமை எனும் அறம் புகழைத் தரும்.

குறள்கள்: 2 - 4 புறங்கூற்றினது கொடுமை

2. மிகுதியான பாபத்தைத் தரும்.
3. இறத்தல் மிகுந்த நன்மையைத் தரும்.
4. பின் விளையும் பாபத்தை அறியாமல் புறம்பேசாதே.

குறள்கள் 5 - 9

புறங்கூறுவாருக்கு உண்டாகும் குற்றம்

5. அறிஞர் மதிக்கமாட்டார்.
6. தன் பழி பெரிதாகக் கூறப்படும்.
7. உறவினர் பிரிந்து போவர்.
8. பலரைப் பலவாறு பேசுவார்.
9. பூமிக்கு தேவையற்ற சுமை.

குறள்: 10 புறங்கூறுதலை விலக்கும் உபாயம்

10. தன் குற்றம் காணுதல்.

# 1. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன் புறங்கூறான் என்றல் இனிது.

ஒருவன் நல்லதைப் பேசாமலும், பாபங்களைச் செய்தலுமாக இருந்தாலும் பிறன் இல்லாதபொழுது இகழ்ந்து பேசமாட்டான் என்று (உலகத்தாரால்) சொல்லப்படுவது இனியது.

அறம் கூறான் = நல்லதைப் பேசமாட்டான்
அல்ல செயினும் = பாபங்களைச் செய்தாலும்
புறங்கூறான் = புறம்பே பேசமாட்டான்
இனியது - நன்மையை தரத்தக்கது.

புறங்கூறான் எனும் புகழ் மற்ற குற்றங்களால் வரும் இகழை மறைத்து மேற்பட்டு விளங்கும்.

இதனால் புறங்கூறாமையின் நன்மை கூறப்பட்டது.




## 2. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
## புறனழீஇப் பொய்த்து நகை.

அறம் என்று ஒன்றில்லை என்று குறைத்துப் பேசுதலையும் பாபங்களைச் செய்தலையும் விடத் தீமை உடையதாகும் ஒருவனைக் காணாத பொழுது பழித்துப் பேசுவதும் கண்டவிடத்து பொய்யாகப் புன்னகைப்பதும் ஆகும்.

அறன் அழிஇ = அறத்தின் மதிப்பை அழிக்குமாறு குறைத்துப் பேசுதல்
புறன் அழிஇ = புறம்பே ஒருவனின் மதிப்பை குறைக்குமாறு குற்றங்களைப் பேசுதல்.
பொய்த்து நகை = பொய்யான சிரிப்பு.

தர்மத்தை இழித்துப் பேசுவதைவிட புறங்கூறுதல் தீமையானது. பாபம் செய்வதைவிடப் பொய்யாக நகைப்பது தீமையானது.

ஒருவன் பிறர் இல்லாதபொழுது அவரை இழித்துப் பேசுவதும் இருக்கின்றபொழுது அவரிடம் போலியாக சிரித்துப் பேசுவதும், அறத்தை பழித்துப் பேசுவதையும் பாபம் செய்வதையும் விடத் தீயதாகும்.



## 3. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலில் சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும்.

பிறரைப் பார்க்காத பொழுது இகழ்ந்து பேசியும் பார்க்கின்ற பொழுது இனிமையாகச் சிரித்துப் பேசியும் உயிர்வாழ்தலைவிட இறந்து போதல் அறநூல்கள் கூறும் செல்வத்தை (மறுமையில்) தரும்.

அறம் கூறும் ஆக்கம் = அறநூல்கள் அறத்தின் பயனாகச் சொல்லும் மறுமையில் அடையும் செல்வம்.
அறம் = அறத்தைக் கூறும் நூலை உணர்த்துவதால் கார்யவாகு பெயர்.

பாபம் செய்வதைவிட பொய்யான வாழ்க்கை பாபமானது. இறந்து போதல் பாபம் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் ஆக்குவதால் மறுமையில் நன்மை பயக்கும் என்றார்.

ஒருவன் பிறர் இல்லாதபோது இகழ்ந்தும் நேரில் புகழ்ந்தும் பேசிப் பொய்யாக வாழ்வதைவிட சாதல் அவனுக்கு நன்மையைத் தருவதாக அமையும்.




# 4. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க முன்னின்று பின்னோக்காச் சொல்.

ஒருவன் எதிரேயிருந்து கடுமையாகச் சொன்னாலும் பரவாயில்லை, அவன் எதிரில் இல்லாமல் பின்விளையும் குற்றத்தைச் சிந்திக்காமல் சொற்களைப் பேசாதிருப்பானாக.

கண் நின்று = நேராக இருந்து
கண் அற = கண்ணோட்டம் - கருணை - இல்லாமல்
முன் இன்று = நேராக இல்லாமல்
பின் = பின் காலத்தில் வரும் குற்றத்தை - பாபத்தை. காலவாகு பெயர்.
நோக்காமை = சிந்தித்து உணராமை. புறங்கூறுதலால் பாபம் வரும் என்று சிந்தித்து அறியாமை.


புறங்கூறுதல் பாபம் என்பதைச் சிந்தித்து, ஒருவன் இல்லாதபொழுது அவனைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். ஒருவன் மற்றொருவனை நேராக அவனிடமே கருணையில்லாமல் இகழ்ந்து பேசினும் அவன் இல்லாத போது இகழ்ந்து பேசாமல் இருக்க வேண்டும்.

இவை மூன்று பாட்டாலும் புறங்கூறுதலின் கொடுமை கூறப்பட்டது.



# 5. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும் புன்மையால் காணப் படும்.

ஒருவனின் புறங்கூறும் கீழ்மைக் குணத்தால் அறம் நல்லதென்று அவன் சொல்லும் வார்த்தைகள், அவன் மனதிலிருந்து விலகியவை என்று அறிஞர்களால் அறிந்து கொள்ளப்படும்.




அறம் சொல்லும் = அறத்தைப் பற்றிக் கூறும்
நெஞ்சத்தான் அன்மை = மனதை உடையனது விலகியிருக்கும் தன்மை
புன்மை = கீழ்மை
காணப்படும் = அறிவுடையவர்களால் உணர்ந்து கொள்ளப்படும்.

புறங்கூறும் இயல்பை உடையவனது அறம் சார்ந்த சொற்கள் அவன் மனதிலிருந்து வருபவையல்ல என்று அறிஞர்கள் உணர்ந்து கொள்வர்.

அறத்தை அறிந்தவர் புறங்கூறமாட்டார் ஆகையால், புறங்கூறுபவன் அறத்தைப் பேசினாலும் அது அவர் அறிந்து பேசுவதல்ல.

மனம் தீயதாக இருப்பவன் அறத்தை நன்றென்று சொன்னாலும் அவன் மனம் அதிலிருந்து விலகியிருக்கிறதென்று அவனது புறங்கூறுதல் எனும் பாபச்செயலால் அறிந்து கொள்ளப்படும்.


6. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

பிறரை அவர் இல்லாதபொழுது பழித்துக் கூறுபவன்தன் குற்றங்கள் பலவற்றுள்ளும் மிகுந்த துன்பம் உண்டாக்கும் தன்மையுடையதை ஆராய்ந்து பழிக்கப்பட்டவனால் நேரே கூறப்படும்.

பிறன்பழி = பிறனொருவனது பழி

பழியை பழியைத் தரும். அதனால் துன்பம் வரும்.

பழிக்கு உள்ளானவன் பழித்தவனின் குற்றங்களில் பெரியதை நேரே கூறுவான் என்பது கருத்து.




## 7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி நட்பாடு தேற்றா தவர்.

சிரித்து மகிழும்படியாக இனிய சொற்களைப் பேசி மற்றவரோடு நட்புக்கொள்வதை அறியாதவர், புறங்கூறி தமது உறவினரையும் பிரிந்து போகச் செய்வர்.

பகச் சொல்லி = பகை உண்டாகுமாறு புறஞ்சொல்லி
கேளிர் = சுற்றத்தார் - உறவினர்.
நகச் சொல்லி = நகைக்கக் சொல்லி = மகிழ்ச்சி உண்டாகுமாறு நல்லன பேசி
நட்பாடல் = நட்பாதல்
தேற்றாதவர் = அறியாதவர்.

நன்மையை இனிமையாகப் பேசினால் அந்நியரும் நண்பராவர். பிறரது குறைகளைப் புறம்பேசினால் உறவினரும் பகைவராவர்.




## 8. துன்னியார் குற்றமும் தூற்று மரபினார்
## என்னைகொல் ஏதிலார் மாட்டு.

**தம்முடன் நெருங்கி இருப்பவருடைய குறைகளையும் அவர் இல்லாதபோது பிறரறிய மற்றவர்களிடம் பரப்பும் பழக்கமுடையவர் அயலார் இடத்தில் செய்வது யாதோ?**

**துன்னியார் = நெருக்கமாக இருக்கும் உறவினர், நண்பர்கள்.**
**தூற்றுதல் = பரப்புதல் - பரவச் செய்தல்.**
**ஏதிலார் = அயலார்.**
**என்னைகொல் = என்னவோ ?**

**அன்புக்குரிய உறவுகளின் குறைகளை பிறரறியப் பரப்பும் மனவடக்கம் இல்லாதவர் மற்றவர்களைப் பற்றிப் பலவாறு பேசத் தயங்கமாட்டார்.**

**உறவுகளையே குறை சொல்லி மற்றவரிடம் பேசுபவர் அயலாரின் குற்றத்தைப் பேசாதிருக்க மாட்டார்.**




## 9. அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை.

பிறர் புறம்பே சென்றது அறிந்து அவரைப் பற்றிய கீழான சொற்களை பேசுபவனது உடற்சுமையை பூமியானது அறம் கருதி மட்டுமே சுமக்கின்றது போலும்.

புன்சொல் = கீழான இழிவான பழிச்சொற்கள்.
வையம் = பூமி
பொறை = தாங்குதல்

அனைத்தையும் தாங்குவதை இயல்பாகக் கொண்டிருக்கும் பூமிதேவியானவள் தாங்கத் தகுதியற்ற புறம் கூறுபவர்களின் உடலையும் தாங்கிக் கொண்டிருப்பது அதனுடைய தர்மத்தைக் கருதி போலும். புறங்கூறுபவன் பாபி எனும் கருத்தில் கூறப்பட்டது.

இவ்வைந்து பாட்டாலும் புறங்கூறுபவருக்கு உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.



# 10. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.


பிறரைக் குறை கூறுவோர் அவர் குற்றங்களைக் காண்பது போல (பாபச் செயலான புறங்கூறுதல் எனும்) தன்னுடைய குற்றத்தையும் அறிந்துகொண்டு அதை விலக்கினால் அந்த ஜீவனுக்கு (பாபத்தினால் எதிர்காலத்தில்) துன்பம் வருதல் என்பது இருக்காது.

ஏதிலார் = அயலார் - பிறர்
மன்னும் உயிர்க்கு = நிலைபெற்ற உயிருக்கு. மீண்டும் மீண்டும் பிறவியெடுத்து வரும் ஜீவனுக்கு.

பிறர் செய்கின்ற தவறான செயல்களைப் பார்த்து மற்றவரிடம் விமர்சிக்கின்ற மனிதன் அவ்வாறு புறங்கூறுவதே ஒரு அறம் இல்லாத செயல் என்பதை அறிந்து புறங்கூறுதலை நிறுத்தினால் அவனுக்கு பாபம் ஏற்படுவதில்லை. ஆகவே அவன் வரும்பிறவிகளிலும் துன்பம் அடைவது இல்லை.

அயலார் குற்றத்தைப் பார்ப்பது போல தம் குற்றத்தையும் பார்ப்பவருக்கு பாபம் உண்டாகாது.

இதனால் புறங்கூறுதலை விடுவதற்கு உபாயம் சொல்லப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com